## மெட்ரோ ரயில்களில் ஒரே நாளில்

# 1.37 லட்சம் பேர் பயணம்

■ சென்னை

பிரதமர் மோடி, சீன அதிபர் ஜீ ஜின்பிங் சந்திப்பின்போது பல்வேறு இடங்களில் சாலை போக்குவரத்தில் மாற்றம் செய்யப் பட்டதால், சாலை பயணத்தை தவிர்த்த மக்கள் மெட்ரோ ரயில் களில் அதிகளவில் பயணம் செய் தனர்.

பிரதமர் மோடி, சீன அதிபர் ஜின்பிங் சந்திப்புக்காக பல்வேறு போக்குவரத்து மாற்றங்கள் செய் யப்பட்டன. குறிப்பாக, ஜிஎஸ்டி சாலையில் கிண்டியில் இருந்து பல்லாவரம் வரையில் போக்கு வரத்தில் அடிக்கடி மாற்றம் செய் யப்பட்டது. கிண்டி, தரமணி, திருவான்மியூர் பகுதியிலும் மின் சார ரயில்கள் சிறிது நேரம் நிறுத்தி இயக்கப்பட்டன. கோவளம், கிண்டி, பல்லாவரம், சோழிங்கநல்லூர், துரைப்பாக்கம் உள்ளிட்ட பல்வேறு வழித்தட பேருந்துகளின் சேவையிலும் பாதிப்பு ஏற்பட்டது.

அதே நேரத்தில் மெட்ரோ ரயில் சேவையில் பெரிய அளவில் பாதிப்பு இல்லாமல் இருந்தது. ஜிஎஸ்டி, அண்ணாசாலை வழியாக செல்ல திட்டமிட்டிருந்த மக்கள் மெட்ரோ ரயில்களை பயன்படுத் தினர். இதனால், மெட்ரோ ரயிலில் பயணம் செய்வது அதிகரித்து இருந்தது. அதன்படி, நேற்று முன் தினம் மட்டும் ஒரு லட்சத்து 37 ஆயிரத்து 820 பேர் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.